[1982 மார்ச் 9

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நாம் இப்போது போட்டிருக்கிற திட்டங்களோடு, கேஸ் டர்பைன் என்ற அளவில் ஒரு 300 மெகாவாட்டில் திட்டம் ஒன்று போட்டிருக்கிறோம். இவைகள் அனைத்தும் சேர்த்து 2,480 மெகாவாட்டுக்கு வருகிறது. இதற்கு 1,345 கோடி ரூபாய் செலவு ஆகும் என்று எதிர்பார்க்கப்பெறுகிறது. அவர்கள் அனுமதி கொடுத்தால், 3 அல்லது 4 ஆண்டுகளில் நிறைவேற்றப் பெறும். இந்தத் திட்டங்கள் அனைத்தும் நிறைவேற்றி முடிக்கப் பெறும்போது, மின் தேவையில் பற்றாக்குறை இராது. நாம் தன்னிறைவை எய்துவோம் என்பதுதான் நிலை.

திருப்பனந்தாளில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம்.

*வினா எண் 423—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவிடைமருதூர் வட்டம் திருப்பனந்தாள் பேரூராட்சியில் துணைப் பதிவாளர் அலுவலகம் ஏற்படுத்த அரசு செயற் குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) மற்றும் (ஆ) 1982–83 ஆம் ஆண்டு பகுதி 2 திட்டத்தின் கீழ் திருப்பனந்தாளில் ஒரு சார்பதிவாளர் அலுவலகம் திறக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டே இந்தத் துணைப் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்று வரையில் அந்த அலுவலகம் திறக்கப்படவில்லை. ஆகவே இந்த ஏப்ரல் மாதத்திலாவது அந்தப் பகுதியில், பதிவு செய்ய வருபவர்களின் நிலையைக் கவனத்தில் கொண்டு, இந்த அலுவலகம் திறக்கப்படுமா என்று அறிய விரும்புவதோடு, அந்த அலுவலக எல்லைக்குள் எத்தனை ரெவின்யூ கிராமங்கள் வரை பதிவு செய்யும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பனந்தாள் எல்லைக்குள் 30 ரெவின்யூ கிராமங்கள் இணைக்கப்பட இருக்கின்றன. அதில் ஏறத்தாழ ஆண்டு ஒன்றுக்கு 722 பத்திரங்கள்—டாக்குமெண்டுகள்

பதிவு செய்கிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. இந்த ஆண்டு அரசு 30 சார்பதிவாளர் அலுவலகங்களைத் திறக்க 2 ஆவது திட்டத்தின் கீழ் முடிவு செய்திருக்கிறது. அதிலே ஒன்றாக இந்த திருப்பனந்தாள் நிச்சயமாக இடம் பெறும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இந்தத் துணைப் பதிவாளர் அலுவலகங்களில் ஸ்டாம்புகளை வாங்குகிறபோது, மதிப்பீடுகள் குறைத்துக் காண்பிக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே. வருவாய்த் துறையில், இருக்கிற வட்டாட்சியர் அல்லது கோட்டாட்சியர் அவர்களிடத்தில் மறுபடியும் மதிப்பீடு போடக் கொடுக்கிறார்கள். அதைத் தவிர்த்து பதிவாளர் அவர்களிடத்திலேயே, அப்படிச் சரியான மதிப்பீடு நிர்ணயிக்கப்படுமா? கோட்ட அளவில் மாவட்டப் பதிவாளர்களின் பதவிகளை ஏற்படுத்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை. விவரமாக வருகிற 19 ஆம் தேதி மானியத்தின் விவாதத்தின்போது விளக்கயிருக்கிறேன்.

மலிவு விலையில் பாரதி-பாரதிதாசன் கவிதைகளை வெளியிடும் திட்டம்.

*வினா எண் 424—திருவாளர்கள் மி. வின்சென்ட், செ. செம்மலை, வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பாரதி—பாரதிதாசன் கவிதைகள் அச்சிடப்பட்டு மலிவு விலையில் விநியோகிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : (1) மகாகவி பாரதியாரின் கவிதைகள் மற்ற படைப்புகளைச் சிறப்பாகவும் மலிவுப் பதிப்பாகவும் வெளியிடுவது பற்றி பரிசீலனை செய்ய துணை வேந்தர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

(2) பாரதிதாசன் கவிதைகளின் பதிப்பு உரிமையும் விற்பனை உரிமையும் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் குடும்பத்தாரிடம் உள்ளது. அவர்களின் இசைவினைப் பெற முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, ''யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்'' என்றும், ''தெருவெல்லாம் தமிழ் ஓசை